பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

01 11 2025 SATURDAY 7 15 AM

ஆகாஷவாணி – செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. சத்திஷ்கட் மாநிலம் உருவாக்கப்பட்டு, 25 ஆண்டுகள் நிறைவடைவதை குறிக்கும் கொண்டாட்டங்களில் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று பங்கேற்கிறார்.

2. பொதுசேவையில் நெறிமுறைகளை மேம்படுத்த, நாட்டின் பண்டைய நிர்வாக ஞானத்தை மீட்டெடுப்பதின் அவசியத்தை குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

3. இந்தியா-பிரிட்டன் இடையேயான உறவு, எதிர்கால நம்பிக்கைக்கு உத்வேகம் அளிக்கக்கூடிய அளவில் உள்ளதாக வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

4. கஷ்மீரில் குளிர் காலம் தொடங்கியுள்ளதால், அரசு தலைமைச் செயலகம் ஜம்முவிற்கு மாற்றப்பட்டுள்ளது.

5. புரோ கபடி லீக் போட்டியில், தில்லி அணி பட்டம் வென்றது.

**>>>>><<<<<**

சத்திஷ்கட் மாநிலம் உருவாக்கப்பட்டு, 25 ஆண்டுகள் நிறைவடைவதை குறிக்கும் கொண்டாட்டங்களில் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று பங்கேற்கிறார்.

இதற்காக, அம்மாநில தலைநகர் ராய்ப்பூர் செல்லும் அவர், 14 ஆயிரத்து 260 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைக்கும் நிகழ்ச்சியிலும் பங்கேற்கிறார்.

இதயக் கோளாறுடன் பிறந்து, ராய்ப்பூர் அடல் நகரில் உள்ள சஞ்சீவனி மருத்துவமனையில் வெற்றிகரமாக சிகிச்சை அளிக்கப்பட்ட 2 ஆயிரத்து 500-க்கு மேற்பட்ட குழந்தைகளுடன் பிரதமர் கலந்துரையாடவுள்ளார்.

பிரம்மகுமாரிகள் அமைப்பின் நவீன தியான மையத்தையும் பிரதமர் திறந்து வைக்கவுள்ளார்.

பின்னர், ராய்ப்பூரில் முன்னாள் பிரதமர் Atal Bihari Vajpayee-யின் சிலையை திறந்து வைக்கவுள்ள அவர், புதிய சட்டமன்ற கட்டிடத்தையும் திறந்து வைத்து உரையாற்றவுள்ளார்.

இன்று பிற்பகல் நடைபெறவுள்ள நிகழ்ச்சியில், சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்ற பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த வீரர்களின் அருங்காட்சியகத்தையும் திரு. நரேந்திர மோடி திறந்து வைக்கவுள்ளார்.

>>>>><<<<<

பொதுசேவையில் நெறிமுறைகளை மேம்படுத்த, நாட்டின் பண்டைய நிர்வாக ஞானத்தை மீட்டெடுப்பதின் அவசியத்தை குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

தில்லியில் நடைபெற்ற இந்திய பொதுநிர்வாக நிறுவனத்தின் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், தொழில்நுட்ப பயன்பாட்டை பொறுத்தவரை, விதிமுறைகள் அடிப்படையிலானது என்பதிலிருந்து பணி அடிப்படையிலான நிலைக்கு மாற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

கொள்கை வடிவமைப்பு, செயல்படுத்துதல், சேவை வழங்குதல் ஆகியவற்றை மேம்படுத்த செயற்கை நுண்ணறிவு, இயந்திர கற்றல் உள்ளிட்ட புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்துமாறும் அவர் அழைப்பு விடுத்தார்.

புகார்களை தீர்க்கவும், ரயில் முன்பதிவுக்கும், டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் பன்மொழி பயன்பாட்டிலும் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுவது பாராட்டத்தக்கது என்றும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறினார்.

>>>>><<<<<

இந்தியா-பிரிட்டன் இடையேயான உறவு, எதிர்கால நம்பிக்கைக்கு உத்வேகம் அளிக்கக்கூடிய அளவில் உள்ளதாக வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

தில்லியில் நேற்று நடைபெற்ற பிரிட்டன் தேசிய தின கொண்டாட்டத்தில் பேசிய போது இதனை தெரிவித்த அவர், தொழில்நுட்பம் மற்றும் பாதுகாப்பு துறையில் இரு நாடுகளுக்கு இடையே ஒத்துழைப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

செயற்கை நுண்ணறிவு மற்றும் முக்கியமான கனிமங்கள் போன்ற துறைகளிலும் ஒத்துழைப்பு வலுவடைந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கல்வித்துறையிலும் ஒத்துழைப்பு அதிகரித்து வருவதாக குறிப்பிட்ட அமைச்சர், பிரிட்டனைச் சேர்ந்த 9 முன்னணி பல்கலைக் கழகங்கள் இந்தியாவில் தங்களது வளாகங்களை தொடங்க அனுமதி பெற்றுள்ளதையும் சுட்டிக்காட்டினார்.

>>>>><<<<<

இன்றைய உலகில் பாரம்பரிய பகைமைகள், தீவிரவாதம், மறைமுகப் போர் மற்றும் தவறான தகவல்களை பரப்புதல் ஆகியவை பெரும் அச்சறுத்தலாக இருப்பதாக ராணுவ தளபதி ஜென்ரல் Ubendra Dwivedi தெரிவித்துள்ளார்.

“தேசிய பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டிற்காக இளைஞர்களை தயார்படுத்துதல்” என்ற தலைப்பில் புதுதில்லியில் நேற்று நடைபெற்ற கருத்தரங்கில் பேசிய அவர், புதிய போர்முறை என்பது ஆயுதங்களற்ற ஒன்றாக மாறி வருகிறது என்று கூறினார்.

சவால்கள் நிறைந்த காலகட்டத்தில் தேசிய பாதுகாப்பும், தேசத்தை கட்டமைப்பும் பிரிக்க முடியாதவை என்றும் அவர் தெரிவித்தார்.

உலக அளவில் தொடர்புகளோடும், சமூக அளவில் விழிப்புணர்வோடும் உள்ள இன்றைய தலைமுறையினர், நவீன போர்க்களத்தின் மையமாக திகழ்வதாகவும் ஜென்ரல் உபேந்திர துவிவேதி குறிப்பிட்டார்.

**>>>>><<<<<**

2047ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க, தூய்மையும், சுயஒழுக்கமும் அவசியம் என்று மத்திய தொலைத்தொடர்புதுறை இணையமைச்சர் Dr. Chandrasekar Pemmasani கூறியுள்ளார்.

தூய்மையே சேவை இயக்கத்தின் கீழ், புதுதில்லியில் உள்ள தொலைத்தொடர்பு துறையின் தலைமை அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை நேற்று அவர் ஆய்வு செய்தபோது இதனை தெரிவித்தார்.

தூய்மை என்பது ஒருமுறை மட்டும் மேற்கொள்ளும் செயல் அல்ல, நமது அன்றாட வாழ்வில் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

தூய்மையான சூழல், ஆரோக்கியத்தையும் செயல்திறனையும் அதிகரிக்கும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

>>>>><<<<<

அறிவாற்றலிலும், புதுமை கண்டுபிடிப்புகளிலும் உலகின் முதன்மையான நாடாக இந்தியா உருவெடுத்து வருவதாக மலேசிய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. Seri Mohamed Khaled Bin Nordin தெரிவித்துள்ளார்.

கோலாலம்பூரில் நடைபெற்று வரும் ஆசியான் – இந்தியா பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டத்தில் பேசிய அவர். இந்தியாவின் வளம் என்பது ராணுவத் திறனில் மட்டுமல்லாமல், அறிவியல், தொழில்நுட்பம், புதுமையான தொழில்நுட்பம் மற்றும் தலைமைப் பண்பிலும் உள்ளது என்று கூறினார்.

இந்தியா, மண்டல அமைதி, நீடித்த வளர்ச்சி மற்றும் செழிப்புக்கு முக்கிய தூணாக விளங்குவதாகவும் அவர் பாராட்டினார்.

மாறி வரும் புவிசார் அரசியல் சூழ்நிலையில், நிச்சயமற்ற காலகட்டத்தில் ஆசியான் மற்றும் இந்தியாவுக்கு இடையிலான ஒத்துழைப்பு மிக அவசியமானது என்றும் அவர் குறிப்பிட்டார்.

>>>>><<<<<

கஷ்மீரில் குளிர் காலம் தொடங்கியுள்ளதால், அரசு தலைமைச் செயலகம் ஜம்முவிற்கு மாற்றப்பட்டுள்ளது.

இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் அரசு நிர்வாக நகர்வு மீண்டும் தொடங்கியுள்ளது.

ஸ்ரீநகரில் நேற்று முதல் அரசு அலுவலகங்கள் மூடப்பட்டுள்ளன.

அந்த அலுவலகங்கள், வரும் திங்கட்கிழமை முதல் ஜம்முவிலிருந்து செயல்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக, அரசு ஊழியர்கள் ஜம்மு செல்ல மாநில அரசின் போக்குவரத்துக் கழகம் சிறப்பு பேருந்துகளை இயக்குகிறது.

முதலமைச்சர் அலுவலகம், தலைமைச்செயலகம் உட்பட 39 முக்கியமான துறைகளின் அலுவலகங்கள் ஜம்முவிற்கு மாற்றப்பட்டுள்ளது.

அரசு நிர்வாகத்தின் இதுபோன்ற செயலால் ஆண்டுதோறும் 200 கோடி ரூபாய் சேமிக்கப்படுவதாக ஜம்மு கஷ்மீர் யூனியன் பிரதேச நிர்வாகம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

இந்தியா - பாகிஸ்தான் எல்லையை ஒட்டியுள்ள பகுதியில், Trishul என்ற பெயரில் முப்படையினரின் பிரமாண்டமான கூட்டுப் பயிற்சி நடைபெற்று வருகிறது.

இந்தப் பயிற்சி இம்மாதம் 13ஆம் தேதிவரை நடைபெறும் என்று புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய கடற்படை வைஸ் அட்மிரல் ஏ.என். பிரமோத் கூறினார்.

கடற்படை மற்றும் ராணுவம், விமானப்படை இடையே ஒருங்கிணைப்பை அதிகரிப்பதே இந்த பயிற்சியின் முக்கிய குறிக்கோள் என்று அவர் தெரிவித்தார்.

கடற்படை சார்பில் 20 முதல் 25 போர்க்கப்பல்களும், விமானப்படை சார்பில் 40 போர் விமானங்களும் இதில் பங்கேற்றுள்ளதாக வைஸ் அட்மிரல் ஏ.என். பிரமோத் கூறினார்.

>>>>><<<<<

ஜமைக்காவில் உருவான Melissa சூறாவளிப் புயல் காரணமாக, 19 பேர் உயிரிழந்தனர்.

புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு நடவடிக்கைகள் தீவிரமாக நடைபெற்று வருவதாக ஜமைக்கா தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. Dana Morris Dixon தெரிவித்துள்ளார்.

நாட்டின் மேற்குப்பகுதியில் பேரழிவு ஏற்பட்டுள்ளதாகவும், தாழ்வான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

சூறாவளியால் பல இடங்களில் மின்கம்பங்கள் சாய்ந்ததால், மின் இணைப்பும் துண்டிக்கப்பட்டுள்ளதாக திரு. Dana Morris Dixon தெரிவித்தார்.

சூறாவளியைத் தொடர்ந்து, இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளதால் தலைநகர் Kingston-ல் உள்ள விமான நிலையத்தில், பல்வேறு நாடுகளிலிருந்து நிவாரணப் பொருட்கள் வரத் தொடங்கியுள்ளன.

அருகில் உள்ள ஹைதி நாட்டிலும் சூறாவளி தாக்கியதில், 30 பேர் உயிரிழந்ததாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

**>>>>><<<<<**

புரோ கபடி லீக் போட்டியில், தில்லி அணி பட்டம் வென்றது.

தில்லியில் நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில், அந்த அணி 31-28 என்ற புள்ளிக்கணக்கில் புனே அணியை வென்றது.

>>>>><<<<<

Hylo ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Unnati Hooda அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஜெர்மனியில் நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் 22-20, 21-13 என்ற செட்கணக்கில் சீன தைபேயின் Lin Hsiang Ti-யை வென்றார்.

இறுதிப்போட்டியில் அவர் இந்தோனேஷியாவின் Putri Kusuma Wardani-யை எதிர்கொள்கிறார்.

>>>>><<<<<

கோவாவின் பனாஜியில் Fide உலக செஸ் போட்டிக்கான கோப்பை, நேற்று வண்ணமிகு கலை நிகழ்ச்சியில் அறிமுகம் செய்யப்பட்டது.

ஐந்து முறை உலக செஸ் சாம்பியன் பட்டம் வென்ற விஸ்வநாதன் ஆனந்த்-தை பெருமைப்படுத்தும் வகையில், இந்த கோப்பைக்கு, அவரது பெயர்

சூட்டப்பட்டுள்ளதாக மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்ச்சியில் கோவா முதலமைச்சர் திரு. பிரமோத் சாவந்த், அகில இந்திய செஸ் கூட்டமைப்பின் தலைவர் திரு. நிதின் நாரங் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

நேற்று தொடங்கிய இப்போட்டி, இம்மாதம் 27ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

80 நாடுகளிலிருந்து 206 பேர் இப்போட்டியில் பங்கேற்கிறார்கள்.

>>>>><<<<<

கோவாவில் நடைபெற்ற சூப்பர் கோப்பை கால்பந்துப் போட்டியில், ஈஸ்ட் பெங்கால் – மோகன் பஹான் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் கோல் எதுவுமின்றி சமநிலையில் முடிந்தது.

ஏற்கனவே நடந்த போட்டிகளில் பெற்ற புள்ளிகள் அடிப்படையில், ஈஸ்ட் பெங்கால் அணி அரையிறுதிக்கு முன்னேறியது.

>>>>>END<<<<<